செயலாற்றுகை அறிக்கை

2020



நிறுவனத்தின் பெயர் : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

செலவுத் தலைப்பு இல : 126-01-02-04-1501

உள்ளடக்கம்

01. அத்தியாயம் - நிறுவன விபரங்கள் / செயற்படுத்தற் சுருக்கம் 01

1.1. அறிமுகம் ---------- 01

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, இலக்குகள் ---------- 02 - 03

1.3. பிரதான பணிகள் ---------- 04

1.4. நிறுவனக் கட்டமைப்பு குறிப்புகளும் நிருவாகமும் ---------- 05 - 06

1.5. திணைக்களத்தின் பிரதான பிரிவுகளும், பொறுப்புக்களும் ---------- 07 - 20

02. அத்தியாயம் முன்னேற்றமும் எதிர்கால நோக்கும் 24

03. அத்தியாயம் - ஆண்டின் மொத்த நிதி நிலைச் செயற்பாடு 25

3.1. நிதிச் செயற்திறன் அறிக்கை ---------- 25

3.2. நிதி நிலை தொடர்பான அறிக்கை ---------- - 26 - 27

3.3. நிதிப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை ---------- 28

3.4. நிதி அறிக்கைக் குறிப்புகள் ---------- 29

3.5. வருமானம் திரட்டும் செயலாற்றுகை ---------- 29

3.6. வேறாக்கப்பட்ட ஒதுக்குகளைப் பயன்படுத்தும் செயலாற்றுகை ------- 29

3.7. மு.ரே. 208 இன் படி வேறு அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதியொருவராக இத் திணைக்களத்திற்கு / மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்கு / மாகண சபைகளுக்கு வழங்கப்பட்ட ஒதுக்குகல் -------- 30

3.8. நிதியல்லாத சொத்துக்களை அறிக்கைப்படுத்தும் செயலாற்றுகை ------- 31

3.9. கணக்காய்வாளரின் அறிக்கை ---------- 32

04. அத்தியாயம் - செயற்திறன் குறிகாட்டிகள் 40

4.1. நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டி (செயற்திட்டத்தின் அடிப்படையில்) ----------

05. அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி நோக்கங்களைப் (SDG) பூர்த்தி செய்தல் செயற்திறன் 41

5.1. இனங்காணப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி நோக்கங்களும் இலக்குகளைப் பூர்த்தி செய்தலின் வெற்றியும் ---------- 41

5.2. சவால்கள் ---------- 43

06. அத்தியாயம் - மனிதவள சுயவிபரம் 44

6.1. ஊழியர் தொகை முகாமைத்துவம் ---------- 44

6.2. நிறுவனத்தின் செயற்திறனை நோக்கிய மனித வளப் பற்றாக்குறை அல்லது அதிகபடியின் விளைவுகள் ---------- 44

6.3. மனித வள விருத்தி ---------- 45

07. அத்தியாயம் - இணக்க அறிக்கை 47

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
செயலாற்றுகை அறிக்கை 2020

அத்தியாயம் 01 – நிறுவன விபரங்கள் / செயற்படுத்தல் – சுருக்கம்

1.1 அறிமுகம்

நாட்டின் மாணவ - மாணவியருக்கு இலசவக் கல்வியின் பயனைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பாடசாலைப் பாடநூல்களை இலவசமாக வழங்குதல் மற்றும் அதனுடன் இணைந் ததான மேலதிக வாசிப்பு நூல்கள் மற்றும் கற்றல் துணைச்சாதனங்களை உற்பத்தி செய்யும் தேசிய பணியை நிறைவேற்றும் பொருட்டு கல்வி அமைச்சின் கீழான உயர்தரமானாதொரு திணைக்களமாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது.

பின்னணி விபரங்கள்

1965 மார்ச் 27 ஆம் திகதியன்று அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வேறானதொரு செலவு அலகொன்றாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது நிதி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டதுடன் 1966 செப்டம்பர் 30 ஆம் திகதி அன்று அதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றினால் அப்போது காணப்பட்ட கல்வி மற்றும் கலாசார அமைச்சின் கீழ் செயற்படுகின்ற ஒரு திணைக்களமாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

1966 ஆம் ஆண்டு முன்னைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கீழ் வரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன.

- ஆரம்ப, இடைநில, உயர்கல்விக்குப் பயன்படுத்துவதற்கான அனுமதிக்கப்பட்ட பாடநூல்களை மொழிபெயர்தல், பகிரங்கப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல், வெளியீட்டு உரிமைகளைக் கொள்வனவு செய்தல்.
- கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான பாடநூல்கள், அகராதிகள், கலைச்சொல் களஞ்சியங்கள் வேறு நூல்களை உற்பத்தி செய்தல், பகிரங்கப்படுத்தல்,விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.
- கற்றல் துணைச்சாதனங்கள், கட்புல / செவிப்புல மற்றும் வேறுகருவிகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல்.
- வாசிப்பு சாதனங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

1965 இல் B தரத்திலானதொரு திணைக்களமாக நிறுவப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது 2004.07.14 ஆம் தினத்திலிருந்து உயர்தர திணைக்களமொன்றாக புனர்நிர் மாணம் செய்யப்பட்டுத் திணைக்களத்தின் பிரதான பதவிப் பெயர் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் என திருத்தி அமைக்கப்பட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் பதவிக்கு இணையானதாகத் தரமுயர்த்தப்பட்டது.

பிரதான கடமைப்பாடுகளைக் கண்காணிப்பதற்கு இலகுவாகும் விதத்தில் திணைக்கள மானது அபிவிருத்தி, உற்பத்தி, விநியோகம், வெளியீடு, தகவல் தொழில்நுட்பம், நிதி, மற்றும் தாபனம் எனும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் கீழ் பிரதி மற்றும் உதவி ஆணையாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், காரியாலய ஊழியர் சேவை உத்தி யோகத்தர்கள், ஓட்டுனர்கள் என ஊழியர் குழு இணைக்கப்பட்டு செயற்படுவதற்காகக் கட்ட மைக்கப்பட்டுள்ளது.

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, இலக்குகள்

தொலைநோக்கு

சர்வதேச கல்வி அபிவிருத்தியுடன் இணைந்த உயர் தரத்தி னாலான கல்வித் துணைச்சாதனங்களை உற்பத்திசெய்து விநியோகிப்பதனால் அனைவருக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிசெய்தல்

பணிக்கூற்று

இலவசப் பாடநூல் விநியோகம் எனும் அரசின் தேசிய கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதுடன் கல்விச் செயற் பாட்டிற்குத் தேவைப்படும் ஏனைய பாடநூல்கள், செயல்நூல்கள், மொழிப்பெயர்ப்பு நூல்கள், மேலதிக வாசிப்புநூல்கள், சொற்களஞ்சியங்கள், அகராதிகள், உட்பட ஏனைய கட்புல, செவிப்புல துணைச்சாதனங் களை உற்பத்தி செய்து விநியோகிப்பதனால் கல்வித் தரத்தை விருத்திசெய்வதன் மூலம், செயற்றிறன்மிக்கதும், பண்பும் அறிவும் ஆற்றல்களும் நிறைந்த பிரசைகள் குழுவொன்றை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு நல்குதல்.

இலக்குகள்

கல்வித் தரத்தை விருத்தி செய்வதனூடாக நாட்டுக்கு செயற்திறன் மிக்க பண்பும் அறிவும் கொண்ட பிரசைகள் குழுவொன்றை உருவாக்குதல்.

- *அரசாங்க பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கல்விகற்கும் தரம் 1 முதல் 11 வரையிலான சகல மாணவர்களுக்குத் தேவையான பாடசாலைப் பாட நூல்களை இலவசமாக வழங்குதல்.*

- *மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்குவதன் மூலம் பாடசாலைப் பாடத்திட்டம் மற்றும் மேலதிக அறிவை மாணவர்களுக்கு வழங்குதல்.*

- *வினாவிடை நூல்களை அச்சிடுவதன்மூலம் பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு பரீட்சைகளுக்கு முகம்கொடுப்பதற்கான தயார் நிலையொன்றை ஏற்படுத்து தல்.*

- *ஆசிரியர் வழிகாட்டிகளை அச்சிட்டு விநியோகிப்பதன் மூலம் பாடத்திட்டம் தொடர்பான அறிவை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.*

- *பாடத்திட்டத்துக்குரிய கற்றல்களை மிகவும் வெற்றிகரமானதாக ஆக்கும் பொருட்டு தேவையான வழிகாட்டிகளை வழங்குதல்.*

1.3 பிரதான பணிகள்

இலக்கம் 14, 715/3 1966 செப்டம்பர் 30 திகதி வெள்ளியன்று இலங்கை அரசின் அதிவிஷேட வர்த்தமானி மூலம் கீழ் காட்டப்பட்டுள்ள பணிகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ஆரம்ப, இடைநிலை, உயர் கல்விப் பயன்பாட்டின் பொருட்டு அனுமதிக்கப்பட்ட நூல்களை மொழிபெயர்ப்புச் செய்தல், பகிரங்கப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல், வெளியீட்டு உரிமையைக் கொள்வனவு செய்தல்.

- கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான பாட நூல்கள், கலைச்சொல் களஞ்சியங்கள், அகராதிகள் மற்றும் வேறு நூல்களை உற்பத்தி செய்தல் பகிரங்கப்படுத்தல் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

- கற்பித்தல் சாதனங்கள், செவிப்புல மற்றும் வேறு கருவிகளின் உற்பத்தி விநியோகம், விற்பனை

- வாசித்தல் சாதன உற்பத்திகளை ஊக்குவித்தல்.


1.4 கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிறுவனக்கட்டமைப்பும் நிருவாகமும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தலைமை நிருவாக அதிகாரியாகக் கடமையாற்றுகின்ற கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்திற்கு நிருவாக செயற்பாடுகளில் இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் I ஐச் சேர்ந்த ஆணையாளர் இருவரும் பிரதி, உதவி ஆணையாளர்கள் 32 பேரினதும் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. நிதிப் பிரிவிற்குப் பொறுப்பாக பிரதம கணக்காளராக இலங்கை கணக்காளர் சேவை தரம் I ஐச் சேர்ந்த ஒரு அதிகாரி செயலாற்றுகின்றார். கணக்காளர் சேவை தரம் II ஐச் சேர்ந்த ஒரு அதிகாரியும் கணக்காளராகக் கடமையாற்றுகின்றார். உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு இலங்கை கணக்காளர் சேவை தரம் I ஐச் சேர்ந்த அதிகாரியொருவர் பொறுப்பாக இருந்து கடமைகளை மேற்கொள்கின்றார்.

நிருவாக இலகுவின் பொருட்டு திணைக்களமானது தாபனப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, உற்பத்திப் பிரிவு, வெளியீட்டுப் பிரிவு, விநியோகப் பிரிவு, நிதிப்பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, விற்பனை மேம்பாட்டுப் பிரிவு மற்றும் தகவல் தொழிநுட்பப் பிரிவு என பிரதான ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பை அடுத்த பக்கத்தில் காணலாம்.

1.4 கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிறுவன அமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- அபிவிருத்திப் பிரிவு
- உற்பத்திப் பிரிவு
- விநியோகப் பிரிவு
- வெளியீட்டுப் பிரிவு
- விற்பனை மேம்பாட்டுப் பிரிவு
- தகவல் தொழிநுட்பப் பிரிவு
- தாபனப் பிரிவு
- கணக்குப் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவு

கடமைப் பொறுப்புக்கள்

- 1 - 11 வரையான தரங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும் பாடநூல்களை ஆக்குதல்.
- உயர்தரம் மற்றும் வேறு உயர் பரீட்சைகளுக்கான மேலதிக நூல்களை ஆக்குதல்.
- வேறு மேலதிக நூல்களை ஆக்குதல்.

  உதாரணம் -

  - மொழிபெயர்ப்புகள்
  - கலைச்சொல் அகராதிகள், அகராதிகள், கடந்தகால வினா விடை நூல்கள்
- e - பாடநூலாக்கம்
- பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கு பிரேல் பாடநூல்களை உருவாக்குதல்.
- களஞ்சியசாலைக்கு வருகின்ற பாடநூல்களின் தரத்தைப் பரிசீலித்தல் (Quality checking)

2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கருமங்கள்

1. தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகளுக்கான பாடநூல்களை மீள்பதிப்பின் பொருட்டு வடிவமைத்தல்

2. மேலதிக நூல்களை ஆக்குதல்

I. 2020 இல் புதிதாக ஆக்கப்பட்ட மேலதிக நூல்கள்

1. சந்தைப் பொருளாதாரம் வினா விடை 2019 - தமிழ்
2. உயர்தர இரசாயனவியல் 2019 - தமிழ்
3. உயர்தரப் பௌதிகவியல் வினா விடை 2019 - தமிழ்
4. உயர்தர உயிரியல் வினா விடை 2019 - தமிழ்
5. உயர்தர வணிகம் வினா விடை 2019 - சிங்களம்
6. உயர்தர பௌதிகவியல் வினா விடை 2019 - சிங்களம்
7. உயர்தர இணைந்த கணிதம் வினா விடை 2019 - தமிழ்
8. உயர்தர உயிரிமுறைமைப்பாட வினா விடை 2019 - தமிழ்
9. உயர்தர எந்திரவியல் தொழிநுட்பம் வினா விடை 2019 - சிங்களம்
10. உயர்தர உயிரிமுறைமைகள் தொழில்நுட்பம் வினா விடை 2019 - சிங்களம்
11. சாதாரணதர பரீட்சை வினா விடை 2019 - சிங்களம்
12. சாதாரணதர பரீட்சை வினா விடை 2019 - ஆங்கிலம்
13. சாதாரணதரப் பரீட்சை வினா விடை 2019 - தமிழ்

3. தேவையின் நிமித்த மீள்பதிப்பு செய்யப்பட்ட மேலதிக நூல்களை அச்சிடுவதற்காகத் தயார் செய்தல்

1. நவீன தமிழ் புனைகதைகளும் நாட்டிய இலக்கியமும் - தமிழ்
2. கத்தோலிக்கம் தரம் 10 - ஆங்கிலம்
3. கத்தோலிக்கம் தரம் 7 - ஆங்கிலம்
4. கத்தோலிக்கம் தரம் 8 - ஆங்கிலம்
5. கத்தோலிக்கம் தரம் 9 - ஆங்கிலம்
6. கத்தோலிக்கம் தரம் 11 - ஆங்கிலம்
7. வரலாறு தரம் 6 - ஆங்கிலம்
8. உலக வரலாறு - சிங்களம்
9. வடிவியல் ஒழுங்கமைப்பு - சிங்களம்
10. கலைச்சொல் அகராதி - சிங்களம் / ஆங்கிலம்
11. வரலாறு தரம் 7 - ஆங்கிலம்
12. வரலாறு தரம் 8 - ஆங்கிலம்

13. வரலாறு தரம் 9 - ஆங்கிலம்
14. வரலாறு தரம் 10 - ஆங்கிலம்
15. வரலாறு தரம் 11 - ஆங்கிலம்
16. உயர்தர காவ்யமய சங்கிரஹய - ஆங்கிலம்
17. இரசாயன பிணைப்புகள் - தமிழ்
18. பௌதிகம் V - சிங்களம்
19. பிரயோகம் புவியியல் I - சிங்களம்
20. பிரயோகம் புவியியல் II - சிங்களம்
21. நுண்ணுயிரியல் - சிங்களம்
22. பிரயோக இரசாயனவியல் - சிங்களம்
23. எந்திரவியல் தொழில்நுட்பம் III - சிங்களம்
24. எந்திரவியல் தொழில்நுட்பம் V - சிங்களம்
25. எந்திரவியல் தொழில் நுட்பம் VI - சிங்களம்
26. எந்திரவியல் தொழில் நுட்பம் VII - சிங்களம்
27. சிங்கள ஆவணப் பயன்பாடு - சிங்களம்
28. மூலிக கலனய - சிங்களம்
29. பயன்பாட்டு விலங்கியல் - சிங்களம்
30. சூழலியல் - சிங்களம்

4. ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களுக்காக டிஜிட்டல் கற்றல் சாதனம் ஆக்கப்பட்டது.
ஆங்கிலப்பாடம் - தரங்கள் 6, 7
விஞ்ஞானம் தரங்கள் 6, 7, 8, 9 - சிங்களம், தமிழ், ஆங்கிலம்
கணிதம் தரங்கள் 6, 7,10,11 - சிங்களம், தமிழ், ஆங்கிலம்

5. களஞ்சியங்களுக்கு இதுவரை பொறுப்பேற்கப்பட்ட சகல நூல்களினதும் தரப்பரிசோதனைச் செயற்பாடு நிறைவுசெய்யப்பட்டது.

6. பாடநூலாக்கம் தொடர்பில் செயலமர்வுகள் வைக்கப்பட்டு திணைக்கள உத்தியோகத்தரின் அறிவை உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தேசியமட்டத்தில் 2020 பெப்ரவரி 10, 11, 12 மூன்று நாட்கள் 17, 18, 19 மூன்று நாட்கள் 24, 25, 26 ஆகிய மூன்று நாட்களிலுமாக 3 செயலமர்வுகளும் 2020 நவம்பர் 24, 27 திகதிகளில் ஒன்லைன் மூல வெளிநாட்டுச் செயலமர்வு ஒன்றும் வைக்கப்பட்டது.

உற்பத்திப் பிரிவு

அறிமுகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உற்பத்திப் பிரிவானது உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு பொறுப்பான ஆணையாளரின் கீழ் இயங்குவதுடன் அதில் உற்பத்திப் பிரிவுக்கும் பொறுப்பான பிரதி ஆணையாளர் ஒருவரும் உதவி ஆணையாளர் ஒருவரும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர் ஐவரும் காரியாலய உதவியாளர் சேவை உத்தியோகத்தர் மூவரும் சமயா சமய அடிப்படையில் வேலை செய்யும் ஒருவரும் சேவையாற்றுகின்றனர். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நோக்கத்தின்படி பாடசாலை மாணவர்களுக்காக ஆக்கப்படுகின்ற சகல பாடநூல்களையும் அரசாங்க அச்சகம், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை அச்சகத்தார்கள் மூலமாக அச்சிட்டுக்கொள்வதே இப்பிரிவின் பிரதான கடமையாகும். இதற்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்படுகின்ற ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் மற்றும் பாடத்திட்டங்களை அச்சிடுவதும் இடம் பெறுகின்றது. மேலும் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்வுகொண்டு மதிப்பீட்டறிக்கைகளை அச்சிடுதல் பாடசாலை மாணவர்கள் மற்றும் வேறு வாசகர்களுக்கு அவசியமான மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்கி அச்சிடலும் இடம்பெறுகின்றது.

உற்பத்திப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் கருமங்கள்

1. பாடநூல் விலைமனுக்கோரல் (Tender) வழங்குவதற்கு முன்னர் விபரக்குறிப்புகளை அமைப்பதற்காக தகவல்களைத் திரட்டுதல், தகவல் தொழில்நுட்பப்பிரிவிலிருந்தும் விநியோகப்பிரிவிலிருந்தும் மற்றும் களஞ்சியங்களிலிருந்தும் மொத்த இருப்பைப் பெற்றுக்கொள்ளுதல்.
2. அம் மொத்த இருப்பை அடிப்படையாக கொண்டு விபரக் குறிப்புக் குழுவொன்றின் மூலம் 2021 க்கான பாடநூல் அச்சிடலுக்கான விபரக்குறிப்பை தயார் செய்தல்.
3. விபரக் குறிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை கல்விவெளியீட்டு ஆணையாளர் நாயகம் மூலம் அனுமதிபெற்று நிதிப்பிரிவிற்கு ஒப்படைத்தல்.
4. பாடங்களுக்குப் பொறுப்பான ஒவ்வொரு அதிகாரிகளுக்கும் அச்சகப் பிரதி, (Press copy) மாற்றுப் பிரதி (Transfer copy) போன்றவற்றை வழங்கி அவற்றில் திருத்தங்களை உள்வாங்கி உரிய இறுவட்டை (CD) தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் பரீட்சித்துக் கொள்ளல்.
5. உரிய விலைமனுக் கோரலை வென்ற நிறுவனங்களுக்கு அச்சகப்பிரதிகளையும் (Press copy) சரியான இறுவட்டையும் வழங்குதல்.
6. ஆசிரியர் வழிகாட்களின் இருப்பு முடிந்ததால் மீண்டும் அச்சிடுவதற்கு விபரக்குறிப்புகளை அமைத்தல்
7. சரவை பார்த்தல் சந்தர்ப்பம் முதல் பண்புத்தரப் பரிசீலனை வரையிலான நூல்களின் சகல நடவடிக்கைகளையும் பரிசீலித்தல்.
8. உரிய காலகட்டத்துள் அச்சகத்தாரை ஊக்குவித்து சரியான நூல்களின் தொகையை களஞ்சியங்களுக்குப் பெற்றுக்கொடுத்தல்.
9. பாடநுல்களில் திருத்தங்கள் மேற்கொள்ளும் போதும் மற்றும் நூல்களின் தொகைகளிலான பிழைகளைத் திருத்தும் போதும் உற்பத்தியாளர்களுக்கு அறிவித்தல் கொடுத்து அவற்றைத் திருத்துதல்.
10. தேவைப்படுமிடத்து தேவையான அச்சகத்தை பரிசீலித்தலும் அவற்றின் அச்சிடல் திட்டத்தைப் பெற்று பரிசீலித்தல் மற்றும் உற்பத்தித் திறன் தொடர்பில் நாளாந்த அறிக்கை தயாரித்தல்
11. பாடசாலைப் பாடநூல்களின் பௌதீகத் தன்மையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். இதற்கிணங்க உள்ளடங்கியுள்ள காகிதம் மற்றும் வெளி அட்டைகளுக்கான நான்கு வர்ண சித்திரம் மற்றும் படங்களைப்பயன்படுத்தல். வெளி அட்டைக்காக ஆர்ட்போர்ட் லமினேட் பண்ணிய 220 gsm காகிதத்தினை பயன்படுத்துவதன் மூலம் கவர்ச்சிமிக்க நூல்த்தொகுதியொன்றை மாணவர் கைக்கு வழங்குதல்.

12. சகல நூல்களும் விபரக் குறிப்புக்குப் பொருத்தமாக காணப்படுகின்றதா என்பதைப் பரீட்சிப்பதற்கு ஆய்வுகூட அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல்.

13. தேசிய கல்வி நிறுவகத்துடன் தொடர்புகொண்டு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அச்சிடல்.

14. மேலதிக நூல்களை அச்சிடல்.

15. பரீட்சைத்திணைக்களத்துடன் தொடர்வுகொண்டு க.பொ.த.(உ.த.), க.பொ.த.(சா.த.), 5 ஆம் தர புலமைப்பரீசில் வினாவிடை நூல்களை அச்சிடல்.

முன்னேற்றத்தை காட்டும் குறிகாட்டிகள்

2021 **ஆம் ஆண்டுக்கான பாடசாலைப் பாடநூல்களை அச்சிடல்** - 2020

தொடர் இலக்கம்	அச்சகம்	நூல் வகைகளின் தொகை	பிரதிகளின் தொகை
01	அரசாங்க அச்சகம்	106	13890, 000
02	தனியார் அச்சகங்கள்	294	25, 541, 500
அச்சிடும் பொருட்டு ஒப்படைக் கப்பட்டிருந்த நூல்களின் மொத்தம்		400	**39, 431, 500**

2020 / 21 ஆண்டுக்காக

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் அச்சிடல் 2020

தொடர் இலக்கம்	நூல் வகை	நூல் வகைகளின் தொகை
01	1 - 5 வரை ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்	09
02	6 - 11 வரை ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்	01
03	12 -13 வரை ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்	03
04	1-5 பிரிவெனா ஆசிரியர் வழிகாட்டி	22
அச்சிடப்பட்ட நூல்வகைகளின் மொத்தம்		**35**

வினா விடை நூல்கள் மற்றும் மேலதிக நூல்கள் அச்சிடல் 2020

தொடர் இலக்கம்	நூல்களின் வகை	நூல் வகைகளின் தொகை
01	மேலதிக நூல்கள்	22
02	வினா விடை நூல்கள்	12
அச்சிட்ட நூல்வகைகளின் மொத்தம்		**34**

விநியோகப் பிரிவு

அறிமுகம்

பாடநூல்கள் விநியோகப் பிரிவானது உற்பத்தி மற்றும் விநியோகத்திற்குப் பொறுப்பான ஓர் ஆணையாளரின் கீழ் செயற்படுகின்றது. பிரதி ஆணையாளர் ஒருவரும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர் ஐவரும், அபிவிருத்தி அலுவலர் ஒருவருக்கு மேலதிகமாக நிரந்தர கனிஷ்ட சேவையாளர் 19 பேரும், சமயாசமய அடிப்படையிலான சேவகர் அறுவரும் இதில் கடமையாற்றுகின்றனர். அரசாங்க, உதவி பெறுகின்ற பாடசாலைகளின் 1 முதல் 11 வரையான வகுப்புகளில் கல்வி பயில்கின்ற சுமார் 4 மில்லியனுக்கு மேற்பட்ட மாணவர் தொகையினருக்கு ஒவ்வொரு பாடசாலை வருடமும் ஆரம்பமாவதற்கு முன்னர் பாட நூல்களை விநியோகித்தலே இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையாகும். இச் செயற்பாட்டின் போது பாடசாலைகள் மற்றும் விநியோக நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் புள்ளி விபரங்கள் அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலைகள் மற்றும் விநியோக நிலையங்களுக்குத் தேவையான நூல்களின் அளவு நிர்ணயிக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டுக்குத் தேவையான மொத்தப் பாடநூல்களின் தொகை இப்புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.

கடமைப்பொறுப்புக்கள்

- நாடு முழுவதுமுள்ள சகல தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் போன்றவற்றிற்குப் புதிய பாடசாலை வருடம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பாடநூல்களை விநியோகித்தல்.
- நாடு முழுவதுமான சகல தேசிய பாடசாலைகள், மகாணப் பாடசாலைகள், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் வலயக் கல்விக் காரியாலயங்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை விநியோகித்தல்.
- பாடநூல் விநியோக நிலையங்களூடாக / கோட்டக் கல்விக் காரியாலயங்களூடாக பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளும் சகல மாகாணப் பாடசாலைகளுக்கும் பாடநூல் போக்குவரத்துக்கான கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். மேலும் பாடநூல் விநியோக நிலையம் மற்றும் கோட்டக் கல்விக் காரியாலய நிலையப் பொறுப்பதிகாரிகள் / உதவி நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சிற்றூழியர்களுக்கான கொடுப்பனவு நடவடிக்கை களை மேற்கொள்ளல்.
- பாடநூல்கள் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்களைத் தயாரித்தல்.
- பாடநூல்களின் தேவைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல் / நிகழ்நிலைப் படுத்தல் / அவற்றின் சுருக்கத்தைத் தொகுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
- மாகாணக் கல்விக் காரியாலயம் / வலயக் கல்விக் காரியாலயம் / கோட்டக் கல்விக் காரியாலயம் / பாட நூல் விநியோக நிலையங்கள் மற்றும் நாட்டின் சகல பாடசாலைகளுடன் தொடர்புகொண்டு பாடநூல்களின் தேவைகளைப் பூரணப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விநியோக கால கட்டங்களில் பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான நாளாந்த அறிக்கைகளைத் தயார்செய்தல்.
- திணைக்களத்துக்குரியதான பாடநூல் களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தல் நடவடிக் கைகளை முகாமை செய்தல் மூலம் தொகைகளைப் பெறல், விநியோகித்தல் தொடர்பான அறிக்கைகளைச் சரியாகப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

பாடநூல்கள் விநியோகம்

2021 ஆம் ஆண்டு பாடநூல்கள் விநியோக செயற்பாட்டிற்கிணங்க நாடு பூராகவும் உள்ள தேசிய பாடசாலைகளுக்கும் 2000 மேற்பட்ட மாணவர் தொகையைக்கொண்ட மாகாணப் பாட சாலைகளுக்கும் கல்வி வெளியீட்டு திணைக்களத்திலிருந்து நேரடியாகப் பாடநூல்கள் விநியோகிப் பட்டதுடன் ஏனைய அரச பாடசாலைகளுக்குப் பாடநூல் விநியோக நிலையங்களூடாகவே பாடநூல் விநியோகம் இடம் பெற்றது. மேலும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாட சாலைகளுக்கும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இவற்றுள் கொழும்பு வலய சகல பாடசாலைகளுக்கும் நுகேகொட கோட்ட சகல பாடசாலைகளுக்கும் நேரடியாக விநியோகிக்கப் பட்டன. இதன் படி 10121 அரசாங்க பாடசாலைகளுக்கும் 103 அரச அனுமதி பெற்ற தனியார் மற்றும் விஷேட பாடசாலைகளுக்கும் 747 பிரிவெனாக்களுக்குமாக 42 இலட்சம் மாணவர்களுக்கு 448 பாடநூல் வகைகளின் கீழ் ஏறக்குறைய 40 மில்லியன் அளவு நூல்கள் விநியோகிக்கப்பட்டன.

பாடநூல்களை மீளப்பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற பாடநூல்களை வருட இறுதியில் மீள்பாவனையின் பொருட்டு பாடசாலைகளுக்கு ஒப்படைத்தல் வேண்டும் (ஆரம்பப் பிரிவிற்காக அச்சிடப்பட்ட நூல்கள், செயல்நூல்கள், க.பொ.த. (சா.த.)ப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நூல்கள் மீளப்பெறப்பட மாட்டாது.) தரம் 6 முதல் 9 வரையான வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காகவே பாடநூல்களை மீள்பாவனை செய்யும் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பாடநூல்களை சிறப்பாகவும், பொறுப்புடனும் பயன்படுத்து வதன் பெறுமதி தொடர்பானதொரு விளக்கத்தைப் பெற்றுக்கொடுப்பதும் அவசியமாகும். இதற்காக அரசினால் மேற்கொள்ளப்படும் செலவுகளைக் குறைப்பதே இச்செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

பாடநூல் விநியோக உபகுழு

நூல்களை விநியோகிக்கும் போது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரிவுகளுக்காக பல உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

(அ) பாடநூல்களின் தரத்தைப் பரிசீலிக்கும் குழுக்களின் அதிகாரிகள் அந்தந்தப் பாடங்கள் அடிப்படையில், மொழிமூல அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு களஞ்சியங்களுக்கு கிடைக்கும் நூல்களை எழுமாறாகப் பரிசீலிக்கும் செயற்பாடு முறையாக இடம் பெறுகின்றது.

(ஆ) செயற்திட்ட உருவாக்கம் மற்றும் முற்போக்குக் கட்டுப்பாட்டு அலகொன்று நூல் விநியோகப்பிரிவுடன் சேர்க்கப்பட்டுள்ளது. பாடநூல் விநியோக செயற்பாட்டைத் திட் டமிடுதல் மற்றும் பாடசாலைகள் விநியோக நிலையங்கள் கோட்டங்களுக்கு அனுப்பும் நூல்களுக்கான விநியோகக்கட்டளைகளைத் தயாரித்தல் என்பன இதன் பொறுப்பாகும். களஞ்சியத்துக்குக் கிடைக்கும் பாடநூல்களின் வகைகள் மற்றும் தொகைகள் தொடர்பான நாளாந்த தகவல்களைப் பெற்று விநியோகக் கட்டளைகளை சீர்படுத்தும் நோக்குடன் ஒரே மாவட்டத்துக்கு நூல்களை போக்குவரத்துச் செய்யும் முறைகளைக் குறைப்பதற்கு இதனால் இடம் கிடைக்கின்றது.

(இ) பாடநூல் கோரல் படிவங்களை 3 நிறங்களில் அச்சிட்டுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் வழங்கப்படுகின்றன. தகவல்களை எடுக்கும் போதும் பாடநூல்களை விநியோகிக்கும் போதும் ஏற்படும் பிழைகளைக் குறைத்து அக் கருமங்களைக் காரிய சித்தியுடன் சரியாக மேற்கொள்வதற்கு இதனால் முடியுமாகின்றது. ஆரம்பப் பிரிவெனாக்களுக்குரிய பாடநூல்களும் கோட்டக்கல்விக் காரியாலய வலைப்பின்னல் ஊடாக விநியோகிக்கப்படுதுடன் ஆரம்பப் பிரிவெனாக்களின் பிரிவெனாதிபதிகளின் பிரிவெனாக்களுக்குத் தேவையான பாடநூல்கள் தொடர்பாக கணக்கு அறிக்கைகளையும் வருடாந்த பாடநூல் கோரல் படிவத்துக்கே உள்வாங்கித் தருவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாடநூல்கள் போக்குவரத்துக்கான கொடுப்பனவு வவுச்சர்களை ஒழுங்குபடுத்தல்

(அ) பாடநூல் விநியோக நிலையத்திலிருந்து பாடசாலை வரை எடுத்துச்செல்லும் பொருட்டு அதிபர்கள் மேற்கொள்ளும் செலவுகளை நிரப்பும் பொருட்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்ற வவுச்சர்களை உரிய சுற்று நிருபத்துக்கேற்ப பரிசீலித்து நிதிப்பிரிவிற்கு அனுப்புதல்.

(ஆ) பாடநூல்களைப் போக்குவரத்து செய்வதன் பொருட்டு தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் மூலம் முன்வைக்கப்படும் விபரப்பட்டியலுக்குரிய (Invoice) கிலோமீற்றர்களைப் பரிசீலித்து உரிய கொடுப்பனவு வவுச்சர்ப் பத்திரங்களை வடிவமைத்து மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைத்தல்.

வெளியீட்டுப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வெளியீட்டுப்பிரிவானது உற்பத்தி மற்றும் விநியோகத் திற்குப் பொறுப்பான ஆணையாளரின் வழிகாட்டலில் செயற்படுவதுடன் அப்பிரிவு பிரதான முகாமைத்துவ சேவை அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் மேலும் 3 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி அலுவலர் சேவை உத்தியோகத்தர் இருவர் மற்றும் களஞ்சிய உதவி சேவையாளர் இருவரினதும் சேவைகளைப்பெற்றுக் கீழ்வரும் கடமைப் பொறுப்புக்களை 2020.01.01 முதல் 2020.12.31 வரையான கால கட்டத்துள் மேற்கொண்டுள்ளது.


- 400 பாடநூல்கள் 38 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் 34 மேலதிக வாசிப்பு நூல்கள் 6 மீள்பாவனை நூல்களுக்கான அச்சிடுவதற்குரிய கோரல்களை அச்சகத்தாருக்கு வழங்குதல் மற்றும் அந்நூல்களுக்கான கோவைகளைத் துவக்கிப் பரிபாலித்தல்.
- பாடநூல்கள், ஆசிரியர் கைநூல்கள் மேலதிக வாசிப்பு நூல்கள் 472 க்குரிய ஒப்பந்தங்களை வடிவமைத்து அச்சகத்தாருடன் ஒப்பந்தங்களுக்கு வருதல்.
- 2014.05.03 ஆம் திகதிய 14/0467/530/015 இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் பா.ச.லே. இல 281 இற்கிணங்க நூல்களின் விலையை நிர்ணயித்தல்.
- முற்பணம் செலுத்துவதற்குத் தேவையான சகல நூல்களுக்குமான முற்பணப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலும் அதற்கிணங்க முற்பண வவுச்சர் தயாரித்து கொடுப்பனவுக்காக முன்வைத்தல்
- அச்சிடுவதற்காக வழங்கப்படுகின்ற சகல நூல்களுக்குமுரிய மொத்த அறிக்கை, தர அறிக்கை அச்சிடல் அனுமதி, மென்பிரதி அறிக்கை, இன்வொய்ஸ் (விலைப்பட்டியல்) போன்றனவற்றை முறையாகப் பெற்றுக்கொள்ளல்.
- தாமதமாதல் அச்சுப்பிழைகள் போன்ற பிரச்சனை ஏற்படும் சகலநூல்கள் தொடர்பாகவும் வழிகாட்டல் குழுவுக்கு முன்வைத்து தீர்வைப் பெற்றுக்கொள்ளல்.
- சகல நூல்களுக்காவும் உரிய கொடுப்பனவு வவுச்சர்களை ஒழுங்கமைத்து சமர்ப்பித்தல்.
- கணக்காய்வு விசாரணைகளுக்காக விடையளிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.

விற்பனை மேம்பாட்டுப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனை மேம்பாட்டு நிலையங்களூடாகப் பாட சாலைப் பாடநூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், கலைச் சொல் அகராதிகள் மற்றும் கடந்த காலப் பரீட்சை வினாப்பத்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

தற்போது திணைக்களத்தின் 6 விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் மருதானை வித்யோதய பிரிவெனா, கோட்டை புகையிரத நிலையம், இசுருபாய, மகரகம தேசிய கல்வி நிறுவனம், மீப்பே ஆசிரிய பயிற்சி நிலையம், மற்றும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இவ்வணைத்து விற்பனை மேம்பாட்டு நிலையங்களிலும் திணைக்கள வெளியீடுகள், மேலதிக வாசிப்பு நூல்கள், ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டிகள், விற்பனை செய்யப்படுவதுடன் மருதானை, இசுருபாய, மீப்பே மற்றும் யாழ்ப்பாண நிலையங்களில் பாட நூல்களும் விற்பனை செய்யப்படுகின்றன.
கல்வி வெளியீட்டுத் திணைக்கள விற்பனை மேம்பாட்டு நிலையமானது 46 ஊழியர்களைக் கொண்டதாகும். இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் III அதிகாரியொருவர், அபிவிருத்தி அலுவலகரொருவர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர், முகாமையாளர் ஒருவர், விற்பனை உதவியாளர் 11 பேர் மற்றும் நிரந்தர சமயாசமய களஞ்சிய உதவியாளர் 29 பேருமாக விற்பனை மேம்பாட்டுப் பிரிவுக்குள் இணைக்கப்பட்டுள்ளனர்.

(ஊழியர்கள் இணைக்கப்பட்டுள்ள முறை கீழ்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ளது)



2020 இல் விற்பனை மேம்பாட்டுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

மாதம்	வித்யோதய விற்பனை நிலையம்	இருசுபாய நூல் விற்பனை நிலையம்	மீப்பே விற்பனை நிலையம்	கோட்டை நூல் விற்பனை நிலையம்	மகரகம நூல் விற்பனை நிலையம்	யாழ்ப்பாண நூல் விற்பனை நிலையம்	மொத்தம்
ஜனவரி	12,737,487.25	11,233,855.80	1,022,055.00	344,901.00	743,178.50	846,917.00	**26,928,394.55**
பெப்ரவரி	6,197,754.30	5,286,001.65	6,871,689.00	436,765.00	1,073,359.00	489,225.85	**20,354,794.80**
மார்ச்	2,347,114.25	2,238,717.00	312.132.00	124,336.00	322,344,00	179,965.25	**5,524,608.50**
ஏப்ரல்	மூடப்பட்டிருந்தது						
மே	மூடப்பட்டிருந்தது					27,624.00	**27,621.00**
ஜீன்	மூடப் பட்டிருந்தது	4,139,424.85	322,590.00	மூடப்பட் டிருந்தது	434,071.00	276,099.00	**5,172,184.85**
ஜீலை	3,087,588.20	5,752,534.29	374,511.00	139,576.00	668,217.00	467,424.30	**10,489,850.79**
ஆகஸ்ட்	5,937,786,65	4,530,964.75	476,768.50	163.765.00	605,720.00	859,638.10	**12,574,643.00**
செப் டெம்பர்	268,246.50	8,729,741.10	482,113.15	225,265.00	909,257.50	882,058.10	**11,496,681.35**
ஒக்டோபர்	2,723,976.60	3,196,898.13	291.578.55	51,172.00	145.781.00	425.903.00	**6,835,309.28**
நவம்பர்	மூடப்பட் டிருந்தது	மூடப்பட் டிருந்தது	610,784.00	மூடப்பட் டிருந்தது	மூடப்பட் டிருந்தது	608.892.00	**1,219,676.00**
டிசம்பர்	மூடப்பட் டிருந்தது	13,580,254.20	1,919,658.00	மூடப்பட் டிருந்தது	மூடப்பட் டிருந்தது	1,266,252.25	**16,766,164.45**
மொத்தம்	**33,299,953.75**	**58,688,391.77**	**12,683,879.20**	**1,485,780.00**	**4,901,928.00**	**6,329,998.85**	**117,389,828.57**

வெளியக நூல்கள் கண்காட்சி விற்பனை வருமானம் - 2020

இலக்கம்	2020 இல் பங்கு பற்றிய நூல்கள் கண்காட்சிகள்
01	அதுகல நூல்கள் கண்காட்சி

விற்பனை மேம்பாட்டு நிலைய அபிவிருத்தி

திணைக்கள வெளியீடுகள் தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற நுகர்வோருக்குத் திருப்திகரமான சேவையொன்றை வழங்கக் கூடிய விதத்தில் போன்றே திணைக்கள விற்பனை வருமானத்தை உயர்த்துவதற்கு முடியுமாகும் விதத்தில் விற்பனை மேம்பாட்டு நிலையங்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இதன்படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது திணைக்கள நிருவாகம் போன்றே நுகர்வோர் மூலம் இடைக்கிடை கவனத்திற்குக் கொண்டுவரும் விசாரணை மற்றும் கருத்துகள் தொடர்பில் கவனத்திலெடுத்து அபிவிருத்தி நோக்கிலான முன் எடுப்புகளுக்காக கவனம் செலுத்தப்படுகின்றது.

தகவல் தொழில் நுட்பப் பிரிவு

திணைக்களத்தின் சகல தரவுகளையும் பராமரித்தல் மற்றும் நிகழ்நிலைப்படுத்தல் தொடர்பான பொறுப்பும், பாடநூல்கள், மேலதிக நூல்கள் மற்றும் வேறு நூல்களைக் கணினி மயப்படுத்தல் மற்றும் அவற்றின் மென் பிரதியைப் பெற்று அச்சுக்காகப் பொருத்தமான விதத்தில் தயார் செய்தல் போன்றன தகவல் தொழிநுட்பப் பிரிவின் முக்கிய பங்காகும்.

பிரதி ஆணையாளர் (தகவல் தொழிநுட்பம் /க. நி. சேவை)

↓

முகாமைத்துவ உதவியாளர் (01)

↓

கனிஷ்ட ஊழியர் சேவை (24)

2021.05.10 ஆம் திகதி முதல் அபிவிருத்திப் பிரிவிலிருந்த கனிஷ்ட ஊழியர்கள் 12 பேர் தகவல் தொழில் நுட்பம் பிரிவில் இணைக்கப்பட்டனர்.

தகவல் தொழில் நுட்பப் பிரிவின் கடமைப் பொறுப்புக்கள்

1. அபிவிருத்திப் பிரிவில் ஆக்கப்படுகின்ற பாடநூல்கள் மற்றும் மேலதிக நூல்களை கணினி மயப்படுத்தல். மென் பிரதியை தயாரித்தல் மற்றும் வெளி அட்டை தயாரித்தல்
2. களஞ்சியங்களின் பாடநூல் விநியோகத் தரவுகளை கணினி மயப்படுத்துவதற்குத் தேவையான கணினி செயற்திட்டங்களை உருவாக்கி களஞ்சியங்களில் தரவுத் தளங்களைப் பராமரிப்பதற்காக உதவி வழங்கல்.
3. பாடநூல்களை அச்சிட்டு களஞ்சியங்களுக்கு விநியோகித்தல் தொடர்பாக மேல் முகாமைத்துவத்திற்குத் தேவையான அறிக்கைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
4. விநியோகப் பிரிவுக்குத் தேவையான லேபல்களை வடிவமைத்துக் கொடுத்தல்.
5. விநியோகித்து முடிக்கப்பட்ட பாடநூல்களின் அளவையும் நூல்களின் பெறுமதியையும் நிதிப்பிரிவிற்கு வழங்குதல்.
6. திணைக்கள வெப்தளத்தை நிகழ் நிலைப்படுத்தி நடாத்திச் செல்லலும், வெப்தளத்திற்கு பாடநூல்களை உள்வாங்கலும்.
7. அடுத்த ஆண்டிற்கான கோரல் படிவத்தை வடிவமைத்து அச்சிடுவதற்கு ஒப்படைத்தல்.
8. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினதும் கல்வி அமைச்சினதும் உற்சவங்களுக்குத் தேவையான அழைப்பிதழ்கள், பனர், போஸ்டர்களை வடிவமைத்தல்.
9. திணைக்களத்தின் சகல கணினிகள், மின்னணு சாதனங்களைப் பராமரித்தலும் தேவையான தொழில்நுட்ப விதந்துரைகளை வழங்கலும்.

<u>பிரேல் அச்சகம்</u>

பிரேல் அச்சகமானது பிரதி ஆணையாளர் ஒருவரின் கீழ் இயங்குவதுடன் அங்கு பிரேல் நூல்களை ஆக்குவதற்காக (மொழிபெயர்த்தல்) பட்டம் பெற்ற செயற்திட்ட உதவிஅதிகாரிகள் மூவரும் அபிவிருத்தி அதிகாரிகள் இருவரும் கடமைபுரிகின்றனர்.

நூல்களை அச்சிடல் மற்றும் விநியோகித்தலுக்காக சிரேஷ்ட அச்சியந்திர இயக்குனர் ஒருவரும் கனிஷ்ட ஊழியர்கள் நால்வரும் கடமை புரிகின்றனர்.

பிரேல் அச்சகத்தின் ஏனைய நிருவாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக அபிவிருத்தி உதவி அதிகாரியொருவர் கடமை புரிகின்றார்.

பிரேல் அச்சகப் பிரிவின் பொறுப்புக்கள்

- கட்புலக் குறைபாடுடைய மாணவர்களுக்கான சகல பாடசாலைப் பாட நூல்களையும் பிரேல் மொழி மூலமாக ஆக்குதல்.
- உதவிபெறும் விஷேட பாடசாலைகள் மற்றும் அரசாங்க பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள விசேட கல்விப் பிரிவுகளுக்கு இப் பிரேல் மொழி மூல பாட நூல்கள் வழங்கப்படுகின்றன.
- எழுத்துக்கள் பெரிதாக்கப்பட்ட பாடநூலாக்கமும் இடம்பெறுகின்றது. (முதலாம் தர மொழி மற்றும் கணித நூல்கள்)

தாபனப் பிரிவு

அறிமுகம்

பிரதி ஆணையாளர் (நிர்வாகம்) ஒருவர், நிருவாக அதிகாரி ஒருவர், பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஒருவர், முகாமையாளர் சேவை உத்தியோகத்தர் ஒன்பது பேர் உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரும் காரியாலய ஊழியர் சேவை, களஞ்சிய உதவியாளர் சேவையைச் சேர்ந்த மூவரும் தாபனப் பிரிவின் நிமித்தம் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடமைப் பொறுப்புக்கள்

★ *திணைக்களத்தின் சாதாரண நிருவாக நடவடிக்கைகள்.*

★ *திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரினதும் தனிப்பட்ட கோவைகளைப் பராமரித்தல் மற்றும் அது தொடர்பான சகல கடமைகள்.*

★ *போக்குவரத்தது விடயம் தொடர்பான சகல கடமைகள்.*

★ *திணைக்கள உத்தியோகத்தர்களின் முற்கொடுப்பனவு B கணக்கின் கீழ் கடன் மற்றும் முற்கொடுப் பனவுகளை வழங்குவது தொடர்பான சகல நடவடிக்கைகள்.*

★ *அக்ரகார காப்புறுதி விண்ணப்பம் தொடர்பான கருமங்கள்.*

★ *திணைக்கள உத்தியோகத்தர்களைப் பயிற்சி நெறிகளுக்காகப் பரிந்துரைத்தல்.*

★ *தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.*

★ *அலுவலக சுற்று நிருபங்கள், அலுவலகக் கட்டளைகளை விநியோகித்தல்.*

★ *நூல் விற்பனையாளர்களைத் திணைக்களத்தில் பதிவு செய்தல் நடவடிக்கைள்.*

★ *சமயா சமய ஊழியர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் அது தொடர்பான சகல உத்தியோகபூர்வ நடவடிக்கைகள்.*

★ *வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை ஒழுங்கமைத்தல் நடவடிக்கைகள்.*

★ *பிட்டிப்பன பாட நூல்கள் களஞ்சியத் தொகுதியைப் பராமரித்தல் நடவடிக்கை.*

★ *திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தரின் 1/20 கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கை கள் மற்றும் சகல உத்தியோகத்தரதும்மேலதிக நேர, போக்குவரத்துச் செலவு, விடுமுறை நாள்கள், சம்பளம் தொடர்பான நடவடிக்கைள்.*

கணக்குப் பிரிவு

அறிமுகம்

கணக்குப் பிரிவுக்காக பிரதம கணக்காளர் ஒருவரும், கணக்காளர் ஒருவரும் அபிவிருத்தி அலுவலர் இருவர் உட்பட முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர் 15 பேரும் இணைக்கப்பட்டுள்ளனர்.

கடமைகள்

- *வருடாந்த செலவுகள் மதிப்பீடு, முற்பணக் கணக்கு எல்லையை தயாரித்தல் மற்றும் மதிப்பீடு மற்றும் எல்லை மறுசீரமைப்புக்குரிய நடவடிக்கைகளும்.*
- *திணைக்களத்தின் சகல ஊழியர்களதும் சம்பளம் தயார்செய்தல் மற்றும் தேய்மானக் காசோலைகளை விநியோகித்தல்.*
- *திணைக்களத்தின் சகல ஊழியர்களினதும் மேலதிகநேர (OT), போக்குவரத்துச் செலவுகள் வேறு கொடுப்பனவுகளைச் செலுத்தல் நடவடிக்கைகள்.*
- *ஊழியர்களின் முற்பண B கணக்கிற்குரியதான கடன் வழங்கலும் திருப்பி அறவிடலும்.*
- *கொடுப்பனவு நடவடிக்கைக்கான சகல புத்தகங்கள், லெஜர் மற்றும் கணக்கறிக்கைகளைப் பராமரித்தல்*
- *ஸிகாஸ் செயற்திட்டம் மூலம் மாதாந்தக் கணக்குச் சுருக்கம் மற்றும் வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல்.*
- *வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்குகளின் இறுதிக் கணக்கறிக்கைகளைத் தயாரித்தல். பொது இருப்புக்கணக்கிற்கு கிடைப்பனவு, கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். மாதாந்த ஒப்பீட்டறிக்கைகளைத் தயார்செய்தல்.*
- *திணைக்கள சகல பிரிவுகளுக்குமான நுகர்வுப் பொருட்கள் மற்றும் மூலதனச் சொத்துக்களை விலைக்கு வாங்குதல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் அறிக்கைகளைப் பராமரித்தல்.*
- *திணைக்களத்துக்குரியதான சகல பயன்பாட்டுச் சேவைகளுக்குமான பற்றுச்சீட்டுகளைத் தீர்த்தல்.*
- *பாடநூல் விநியோக அதிகாரிகள் கொடுப்பனவுடன் பாடநூல்களைக் கொண்டு சென்றமைக்கான அதிபர் கொடுப்பனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் நிலையைப் பொறுப்பதிகாரிக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல்*
- *வருடாந்த செய்முறை உருப்படிகள் மற்றும் தொகை மதிப்பு மேற்கொள்ளலும் மதிப்பீட்டுக் குழுவின் விதந்துரைக்கிணங்க சிதைந்த பொருட்களை அப்புறப்படுத்தலுட்பட வேறு நட வடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.*
- *பாடநூல் விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் விற்பனை அறிக்கைகளை ஆவணப்படுத்தல்.*
- *பாடநூலாக்கம், மொழிபெயர்ப்பு, பதிப்பித்தல் போன்றவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.*
- *அச்சிடப்படுகின்ற சகல பாடநூல்களுக்குமான விலை நிர்ணயம்.*
- *கொள்முதல் வழிகாட்டல் சஞ்சிகைக்கிணங்க பாடசாலைப் பாடநூல்களை அச்சிடல், நூல்கள் போக்குவரத்து மற்றும் ஏனையவற்றைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக விலை கோரல், தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு இணைப்பாக்கம் செய்தல்,கொள்முதல் குழுவிற்குப் பரிந்துரை செய்தல், அத்தீர்மானத்திற்கிணங்க செயற்படல் மற்றும் கொள்வனவு செய்தலும் சேவை தொடர்பில் கொடுப்பனவு மேற்கொள்ளலும்.*
- *திணைக்களத்துக்குச் சொந்தமான சகல புத்தகங்களையும் களஞ்சிய நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல்.*

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக மிகத் திட்டமிடப்பட்டுள்ள உள்ளக வேலை ஒழுங்குகளைக் கொண்டுள்ள முறையான நிருவாகச் சூழலொன்றை மேற்கொண்டு செல்லும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளதுடன் அது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் வழிகாட்டப்படுகின்றது.

- பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (1)
- அபிவிருத்தி அதிகாரிகள் (3)
- முகாமைத்துவ சேவை அதிகாரிகள் (1)
- களஞ்சிய உதவியாளர் (2)

இப்பிரிவின் மூலம் பிரதானமாக திணைக்கள உள்ளக நிர்வாக முறை நடைமுறைப்படுத்தப்படுதல் பரிசீலித்தல் திணைக்களம் எதிர்பாக்கும் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு திட்மிடப்பட்ட செயற்பாடுகளின் பலன்களும் காரிய சித்தியும் பரிசீலிக்கப்படல் செயற்பாட்டுக் கட்டுப்பாடு, கணக்குக் குறைபாடுகள், செயலாற்றுகை, விதிகள் ஒழுங்குமுறை சட்ட விதிகளுக்ககிணங்காத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக தேடிப்பார்த்து கண்டறியப்பட்ட விடயங்களை கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்புவதன் மூலம் அக்குறைகளைத் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் பின்னூட்டல் மூலம் சிறந்த நிருவாகமொன்றை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்படி உள்ளகக் காணக்காய்வுப் பிரிவு மூலம் 2020 ஆம் ஆண்டு திணைக்களத்துக்குரிய கணக்காய்வு விசாரணைகளில் காணப்படும் பிழைகள் மற்றும் குறைபாடுகள் போன்றவற்றைத் திருத்திக் கொள்வதற்கும் பாடநூல்கள் அச்சிடல் விநியோகித்தல் கடமைகளை மிகக் காரிய சித்தியுடன் மேற்கொள்வதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான கட்டளைவிதிகள் கீழ்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

தொ. இல	விபரம்	திருத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள்
01	கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பற்றிய வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019	சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகளை சரிப்படுத்திக் கொள்வதற்கு விதந்துரை வழங்கல்
02	பாட நூல்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டி நூல்களை அச்சிடல் மற்றும் விநியோகித்தல் கருமங்களை பரிசீலனை செய்தல்	உரிய காலகட்டத்துள் கருமங்களை நிறைவேற்றுதல் தொடர்பான விடயங்களைப் பரிசீலித்துப் பாட நூல்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டிகளை விநியோகித்தல் மற்றும் அச்சிடல் தாமதங்களைக் குறைத்துக் கொள்ளும் முறைகளை முன்மொழிதல்
03	பாட நூல்களை அச்சிடுவதுடன் தொடர்பான சகல பிரிவுகளதும் நடவடிக் கைகளைப் பரிசீலனை செய்தல்	உரிய காலத்துக்கு அச்சிடல் நடவடிக் கைகள் மேற்கொள்வதில் ஏற்படும் தடை களை இனங்கண்டு அவற்றைத் திருத் திக்கொள்வதற்குத் தேவையான விதந்து ரைகளை வழங்குதல்
04	திணைக்களத்துக்குரியதான விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களைப் பரிசீலித்தல்	விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களில் தொகைச் சுருக்கம் தொடர்பில் காலாண்டு சோதனையையும் தேவைப்படுமிடத்து திடீர்ச்சோதனை களையும் மேற்கொள்ளல்
05	நிறுவன நடவடிக்கைகளையும் பரிசீலித்தல் (லீவுப்படிவம், சம்பள அதிகரிப்பு செலுத்தல் மற்றும் தனிப்பட்ட கோவைகளை பரிசீலித்தல்)	திணைக்கள அதிகாரிகளின் தனிப்பட்ட கோவைகளில் காணப்படும் குறைபாடு களை சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்திக் கொள்வதற்குத் தேவையான விதந்துரைகளை வழங்கல்
06	பாடத்திட்ட மாற்றத்துக்குட்பட்ட புதிய பாட நூலாக்கம் தொடர்பான பரிசீலனை	பாடத்திட்ட மாற்றத்துடன் கூடிய பாட நூலாக்கத்தின் போது ஏற்படும் சிக்கல்கள் மற்றும் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைத் திருத்தி கொள்வதற்குத் தேவையான விதந்துரைகளை வழங்கல்
07	வருடாந்தப் பாட நூல்கள் அச்சிடல் தேவைகளைச் சரியாக இனங்காணல்	வருடாந்தப் பாட நூல்கள் தேவையைச் சரியாகத் தீர்மானிப்பதற்கான முறைகளை ஆக்கும் போது புதிய விதந்துரைகளை முன்மொழிதல்

அத்தியாயம் 02 – முன்னேற்றமும் எதிர்கால நோக்கமும்

விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

வெற்றிகள்

- 2020 ஆம் ஆண்டுக்கான 400 வகையான பாடநூல்களில் 39,431,500 பிரதிகளை உரிய காலத்துள் அச்சிட்டு அரசாங்க பாடசாலைகளுக்கு தாமதமேற்படாது விநியோகிப்பதற்கான நடடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டது. (2021 ஆம் ஆண்டு விநியோகத்திற்காக)

சவால்கள்

- மிகச் சரியான பாடநூலொன்றைப் பெறும் பொருட்டு பாடநூலில் ஏற்படக்கூடிய குறைகளைத் தவிர்த்துக்கொள்ளல்
  உதாரணம்- மென்பிரதியில் ஏற்படும் குறையை தவிர்த்துக் கொள்ளல்
- மென்பிரதியில் திருத்தங்களை உள்வாங்கும்போது ஏற்படும் பிழைகளை தவிர்த்துக்கொள்ளல்
- அச்சகங்களில் பாடநூல் அச்சிடலில் தாமதமேற்படுவதைத் தவித்துக் கொள்ளல்
- பெருந்தொகையான நூல்தொகையொன்று ஒரேயடியாக களஞ்சியத்துக்குக் கிடைக்கும் போது ஏற்படும் நிலைமைகளை முகாமைத்துவம் செய்துகொள்ளல்
- பாடநூல்களை இறக்குதல், ஏற்றுதல் மற்றும் விநியோகத்தின் பொருட்டு லொரிகளில் செல்வதற்கு போதுமான அளவு வாகன வசதிகளை / லொரிகளை வழங்கும்போது ஏற்படும் பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்தல்
- விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படல்
- விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் காணப்படும் வசதி வாய்ப்புகள் தொடர்பில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் ஊழியர் குறைபாடு தொடர்பான சிக்கல்கள்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் எதிர்காலத் திட்டங்கள்

- நூல்களைக் கோரல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றிற்கு Online system ஒன்றை அறிமுகப்படுத்தல்.
- பாடசாலை மாணவர்களுக்காக காலத்திற்கேற்ற தலைப்புக்களில் கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்ட மேலதிக வாசிப்பு நூல்களின் தொகுதியொன்றை அறிமுகம் செய்தல்.
- பாடநூல்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வுகளை (research) மேற்கொள்ளல்.
- நாட்டின் பிரதான நகரங்களில் நூல்கள் விற்பனை மேம்பாட்டு நிலையங்களை ஆரம்பித்தல்.
- மேலதிக நூல்களைக் கோரும் பொருட்டு கணினி மயப்படுத்தப்பட்ட முறையொன்றை அறிமுகம் செய்தல்.

அத்தியாயம் 03 - ஆண்டின் மொத்த நிதி நிலைச் செயற்பாடு

3.1 நிதிச் செயற்திறன் அறிக்கை

2020 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடையும்
வருடத்துக்கான நிதிச் செயற்திறன் அறிக்கை

ACA F

ரூ

வரவு செலவு - 2019		குறிப்பு	கோட்பாடு 2019	2018	
	வருமானம் பெறுதல்				
	வருமானவரி	1			ACA - 1
	தேசிய பொருட்கள் சேவைகள் வரி	2			
	சர்வதேச விற்பனை வரி	3			
	வரியில்லா வருமானம் மற்றும் வேறு	4			
	மொத்த வருமானம் பெறல்				
	வருமானம் அல்லாத பெறுகைகள்				
0	திறைசேரி மேலான்மை		4,412,750.00	4,423,306.000	
0	வைப்பு		61,182,068	37,074,323	ACA - 3
4,655.200.000	முற்பணக் கணக்கு		4,725,787,337	4,782,548,286	ACA - 4
	வேறு கிடைப்பனவு		75,891,566	110,407,061	5/5(A)
4,655.200.000	வருமானம் அல்லாத மொத்த வரவு		9,275,610.971	9,353,335,670	
4,655,200,000	மொத்த வருமானப் பெறுகையும், வருமானம் அல்லாத பெறுகையும்		9,275,610.971	9,353,335,670	
	குறைக்கப்பட்ட செலவுகள் மீண்டு வரும் செலவு				
46,100.000.00	சம்பளம், வேறு ஏனைய ஊழியர் நன்மைகள்	5	45,808,746	40,434,485	
16.820.000.00	வேறு பொருட்கள் மற்றும் சேவைகள்	6	15,559,940	15,812,641	ACA
1.850.000.00	மானியங்கள், முக்கிய மற்றும் பரிமாற்றம்	7	1,811,658	1,662,861	2 (ii)
0	வட்டி செலுத்துதல்	8	0	0	
0	வேறு மீண்டு வரும் செலவுகள்	9	0	0	
64,770,000.00	மொத்த மீண்டு வரும் செலவுகள்		63,180,344	57,909,987	
	மூலதனச் செலவு				
	மூலதனச் சொத்துக்களை புனர்நிர்மானம் செய்தல்		1,799,738	818,515	
1.800.000.00	மற்றும் மேம்படுத்தல்	10			
	மூலதனச் சொத்துக்கள் வாங்		1,185,218	4,969,733	ACA
2.500.000.00	குதல்	11			2 (ii)
0	மூலதன மாற்றம்	12	0	0	
0	நிதிச்சொத்துக்களை கையகப்படுத்தல்	13	0	0	

150.000.00	திறன் மேம்பாடு	14	143.832	544,404	
20,000,000.00	வேறு மூலதனச் செலவு	15	6,604.635	13,869,855	
24,450,000.00	மொத்த மூலதனச் செலவு		9,733,423	20,202,507	
	முக்கிய பேரேட்டுச் செலவுகள்		4,646,110,482	4,644,643,842	
	வைப்புச் செலுத்தல்		80,991,341	24,578,214	ACA-4
	முற்பணக் கொடுப்பனவு		4,565,119,141	4,620,065,628	ACA-5/5(A)
	மொத்த செலவு		4,719,024,249	4,722,756,336	
	2019 டிசம்பர் 31 திகதி மேலாண்மை மீதி		4,556,586,722	4,630,579,334	

3.2 நிதி நிலை தொடர்பான அறிக்கை

2020 டிசம்பர் 31 திகதியன்று
நிதி நிலை தொடர்பான அறிக்கை

	குறிப்பு	கோட்பாடு	
		2019 ரூபா	2018 ரூபா
நிதியில்லா சொத்துக்கள்			
கட்டிடங்கள், தொழிலகம் மற்றும் கருவிகள்	ACA-6	336,987,329.00	347,517,819.00
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்கு	ACA 5/5(A)		
பணமும் பணத்துக்கு சமனானது.	ACA-3	6,754,834,074.00 0	6,915,502,270.00 0
மொத்த சொத்துக்கள்		7,091,821,403.00	7,263,020,089.00
நிகர சொத்துக்கள்/ பெருந்திரள்			
மொத்த சொத்துக்கள்		6,751,353,019.00	6,891,566,162.00
கட்டிடங்கள் தொழிலகம் மற்றும் கருவிகள் பூல்		336,987,329.00	347,517,819.00
கூலி மற்றும் வேலை முற்பணப் பூல்	ACA -5 (B)		
நடமாடும் வகை கூறல்		0.00	0.00
வைப்புக் கணக்கு	ACA -4	3,481,055.00	23,290,328.00
மேலாண்மைச் சமநிலை	ACA -3	0.00	645780.00
மொத்த வகை கூறல்		7,091,821,403.00	7,263,020,089.00

பக்க இலக்கம் 6 முதல் 42 வரை ACA 1 முதல் ACA 6 வரையான படிவத்தாள்களில் முன்வைக்கப்பட்டுள்ள கணக்கு விபரங்கள் மற்றும் குறிப்புகளை பக்க இலக்கம் 43 முதல் 50 வரை உள்வாங்கப்பட்டுள்ள கணக்குக் குறிப்பு விபரங்களும் இவ்விறுதி கணக்கிலும் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதியாகும். இந்நிதி அறிக்கையைத் தயார் செய்வது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குக் கோட்பாடுகளுக்கு

இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இங்கு நிதி அறிக்கையில் குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகப்பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலே இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் அதற்குரியதான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்கு விபரங்கள் திரைசேரி கணக்குப்புத்தகத்துடன் ஒப்பிடப்பட்டுள்ள படியும் அவை எண்ணிக்கையுடன் ஒன்றுபடுகின்ற படியும் இங்கு உறுதிப்படுத்துகின்றோம்.

.....	.....	.....
பிரதான கணக்கு வழங்கும் அதிகாரி	கணக்கு வழங்கும்அதிகாரி	பிரதம கணக்காளர்
பெயர் :	பெயர் :	பெயர் :
பதவி :	பதவி :	பதவி :
திகதி :	திகதி :	திகதி :
எச். எம். சித்ரானந்த	டபிள். எம். ஜயந்த விக்ரமநாயக்க	எஸ். குலதீபன்
செயலாளர்	கல்விவெளியீட்டு ஆணையாளர் நாயகம்	பிரதம கணக்காளர்
கல்வி அமைச்சு	கல்வி வெளியீட்டுத் திணைக்களம்	கல்விவெளியீட்டுத் திணைக்களம்
